பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 16 ரபி அவ் 19 இதழ் 18
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-2-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## "இந்த வருடம் அதிகமாணவருக்கு இடம் கிடைக்கும்"

(கொழும்பு)

தரப்படுத்தலை நீக்கியதனால், இந்த வருடம் கூடுதலான மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்ன நேற்றுக் காலை கல்வி அமைச்சில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் கூறினார்.

ஆதாரமற்ற சில விஷயங்களை மையமாகக்கொண்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த ஒரு பிரிவினர் முயன்றனர் என்றும் இது பலிக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம)

# யாழ். மாவட்ட ஐ. தே. கட்சி அமைப்பாளர்கள் பதவிநீக்கம்

[கொழும்பு]

**யாழ். மாவட்டத்திலுள்ள சகல ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்களும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்! இந்த நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வருவதாக ஐக்கியத் தேசியகட்சி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.**

யாழ். மாவட்டத்தில் இயங்கும் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள் சிலர் மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றதும், சிலர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததும் வாசகர்கள் தெரிந்ததே.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் கமிட்டியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு மேற்படிநபர்கள்மீது விசாரணைகளை நடத்தியது.

இந்த விசாரணைக்குழுவின் சிபார்சுகளைத் தொடர்ந்தே யாழ் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள் அனைவரும் நீக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

தற்போதுள்ள யாழ். மாவட்ட ஐ. தே. க. அமைப்பாளர்கள் உடனடியாக நீக்கப்படுவதால், புதிதாக அமைப்பாளர்களைத் தெரிவுசெய்வதா என்பது குறித்து ஐக்கிய தேசியக்கட்சி செயற்கமிட்டி இன்னும் முடிவு செய்யவில்லை இன்றும், இவ்விஷயம் குறித்து நீண்ட பரிசீலனை நடைபெற்றதன் பின்னரே இறுதி முடிவு மேற்கொள்ளப்படுமென்றும் ஐ தே கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### இவருக்கும் 'கல்தா'

கொழும்பு மேற்கு இடைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு லால் குணவர்த்தனவை கட்சியிலிருந்து நீக்குவதென்றும் ஐ. தே. கட்சி முடிவு செய்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவரான இவர், இத்தொகுதியில், கட்சி கட்டுப்பாட்டை மீறி சுயேச்சையாகப் போட்டியிட நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார். [ம]

## பிரமானந்தரெட்டி ராஜினமா!

புதுடில்லி, பெப். 27

கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ்கட்சி படுதோல்வி அடைந்ததையடுத்து காங்கிரஸ்தலைவர் திரு பிரம்மானந்தரெட்டி தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

திரு. ரெட்டி தமது ராஜினமாக் கடிதத்தை காங்கிரஸ் பொதுச்செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

கர்நாடக மாநில சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தமைக்குத் தாமே பொறுப்பேற்பதாக திரு. ரெட்டி தமது ராஜினமாக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். [இ]

**சன்சோனி கமிஷன் விசாரணை இன்று மீண்டும் ஆரம்பமாகிறது**
**முதல்நாள் விசாரணை விபரங்களை அடுத்தநாளே அறிந்துகொள்ள 'ஈழநாடு'வை படியுங்கள்**

## கிணற்றில் வாக்குப்பெட்டி

புதுடில்லி, பெப். 27

கடந்த சனியன்று நடைபெற்ற மகாராஷ்டிர மாநில சட்ட சபைத் தேர்தலின்பின் ஒரு தொகுதியைச் சேர்ந்த 2 வாக்குப் பெட்டிகள் காணமற்போனதை அடுத்து இன்று குறிப்பிட்ட வாக்குச் சாவடியில் மட்டும் மீண்டும் வாக்குப் பதிவு இடம்பெற்றது.

பின்னர் காணமல்போன இரு பெட்டிகளும் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டன [இ]

## கொடிநாள் விழா

[கைதடி]

இலங்கை சைவ அநாதை இல்ல வருடாந்தக் கொடிநாள் விழா அடுத்தமாதம் 10ந்தேதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது நேற்றுமுன்தினம் வெளியான ஈழநாடு இதழில் இவ்விழா அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறுவதாகத் தவறுதலாகப் பிரசுரமாகியிருந்தது

விழாவில் பல பெரியார்கள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவர். (அ)

## ஆந்திராவிலும் இந்திரா! 2 மாநிலங்களில் ஜனதா

புதுடில்லி, பெப். 27

ஐந்து மாநிலங்களிலும், ஒரு யூனியன் பிரதேசத்திலும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் இன்று நள்ளிரவுவரை வந்த முடிவுகளின்படி, திருமதி இந்திராகாந்தியை தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கட்சி, கர்னடகத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் பெற்று ஆட்சி அமைக்கிறது. ஆந்திரப் பிரதேசத்திலும் இக்கட்சி ஆட்சியமைக்கிறது.

இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வமான முடிவுகள் [மாநிலரீதியாக] வருமாறு:

### கர்னடக மாநிலம்

மொத்த ஆசனங்கள் 224.
முடிவுகள்:

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | —152 |
| ஜனதா | —58 |
| ஸ்தாபன காங்கிரஸ் | —02 |
| ஏனையவை | —12 |

### ஆந்திரா

294 ஆசனங்களைக்கொண்ட ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் இன்று நள்ளிரவு வரை இந்திரா காங்கிரஸ்கட்சியே முன்னணி வகித்தது. அறிவிக்கப்பட்ட 171 முடிவுகளின்படி:

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | —120 |
| ஜனதா | —36 |
| ஸ்தாபன காங்கிரஸ் | —09 |
| மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | —02 |
| இதரகட்சிகள் | —04 |

### மகாராஷ்டிரம்

288 ஆசனங்களைக்கொண்ட மகாராஷ்டிர மாநிலத்தில் இதுவரை அறிவிக்கப்பட்ட 46 முடிவுகளின் படி:

| | |
|---|---|
| ஜனதா | —17 |
| மார்க்சிஸ்ட் கம்யூ | —03 |
| ஸ்தாபன காங்கிரஸ் | —17 |
| ஏனைய கட்சிகள் | —09 |

### அஸாம்

126 ஆசனங்களைக்கொண்ட இம்மாநிலத்தில் இதுவரை அறிவிக்கப்பட்ட 28 முடிவுகளின்படி:

| | |
|---|---|
| ஜனதா | —14 |
| ஸ்தாபன காங்கிரஸ் | —10 |
| இதரகட்சிகள் | —04 |

### மேகலாயா

60 தொகுதிகளைக் கொண்ட மேகலாயா மாநிலத்தில் இதுவரை அறிவிக்கப்பட்ட 46 முடிவுகளின்படி:

| | |
|---|---|
| ஸ்தாபனகாங்கிரஸ் | —14 |
| சுயேச்சை | —05 |
| இதரகட்சிகள் | —28 |

### யூனியன் பிரதேசம்

யூனியன் பிரதேசமான அருணாசலப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமைதான் முதற்தடவையாக சட்டசபைத்தேர்தல் நடைபெற்றது 30 ஆசனங்களை கொண்ட சட்டசபையில் இதுவரை அறிவிக்கப்பட்ட 03 முடிவுகளின் படி—

| | |
|---|---|
| ஜனதா | —02 |
| சுயேச்சை | —01 |

### கட்சிகள் நிலபரம்

இன்றுநள்ளிரவுவரை வெளியான சட்டசபைத் தேர்தல்கள் முடிவுகளின்படி, இந்திரா காங்கிரஸ் இரண்டு மாநிலங்களில் தனது ஆட்சியை நடத்தவும், ஜனதா இரண்டு மாநிலங்களிலும் முன்நிற்கிறது.

## திருமதி. காந்திக்கு பிணை அனுமதி

புதுடில்லி, பெப். 27

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை டில்லி மெற்றொபொலிட்டன் மாஜிஸ்ரேட் இன்று பிணையில் செல்ல அனுமதித்தார்.

நெருக்கடி நிலை காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறிய செயல்கள் சம்பந்தமாக விசாரணை செய்துவரும் 'ஷா கமிஷன்' முன்வாக்குமூலமளிக்க மறுத்தமையடுத்து திருமதி காந்திக்கும், திரு பிரணப்குமார் முகர்ஜிக்கும் எதிராக ஷாகமிஷன் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

நீதிபதி கோரினால் மட்டும் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவும் திருமதி காந்திக்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.

திருமதி காந்தியுடன் பிணை செல்ல அனுமதிக்கப்பட்ட திரு பிரணப்குமார் முகர்ஜிக்கும் நீதிமன்றத்தில் சமுகமளிப்பதற்கு மேற்கண்ட அனுமதி அளிக்கப்பட்டது.

திருமதி காந்தியும், திரு முகர்ஜியும் இன்று நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

திருமதி காந்தி சார்பில் திரு அன்ரனியுடன் 3 வழக்கறிஞர்களும், ஷா கமிஷன் சார்பில் திரு. கண்டவாலா உட்பட இரு வழக்கறிஞர்களும் ஆஜராகினர். (இ)

# மாவட்ட மந்திரிப்பதவி ஏற்றால் இலட்சியப்பாதை தவறிவிடும்!

## திருமலையில் 'அமிர்' விளக்கம்

(திருமலை) 'மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்றால் அந்தந்தப் பகுதிகள் முன்னேற வழிகிடைக்கும் என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். இப்பதவியை நாம் ஆசைப்பட்டுப் பெற்றால் நம்இலட்சியப்பாதையிலிருந்து விலகியவர்களாவோம்'

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திருமலை முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற த.வி. கூட்டணியின் மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திருமலை எம். பி. திரு. இரா சம்பந்தன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், 'திருமலை பல சோதனைகளுக்குள்ளாகியுள்ளது. ஆகஸ்ட் கலவரத்தின்போது திருமலை ஏனைய பகுதிகளிலும் பார்க்க பெரும் கஷ்டங்களுக்குள்ளாகியது. இங்கு நடந்த கொடுமைகளுக்கு காலம் பதில்சொல்லும்' என்றார்.

### காவலூர் எம்.பி. பேச்சு

'நாம் அரசாங்கத்துடன்ஒத்துப்போய் எதனையும் பெற முடியாது' என்று ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'இதுவரையிலும் இனிமேலும் நடக்கமுடியாத காரியம் எமக்கு எதிர்க்கட்சித் தலைமைப்பீடம் கிடைத்தது. கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் எமது இன ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்டியது. நாம் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றது நல்லதொரு முடிவே.

போராடித்தான் நாம் எம் இலட்சியத்தை அடையவேண்டும்' என்றார்.

### கோப்பாய் எம். பி.

கோப்பாய் எம்.பி திரு.வி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் 'இலங்கையில் கடைசியாக நடந்த தேர்தல் முடிவு மூலம் தமிழர் ஒற்றுமையை உலகறிய முடிந்தது. நாம் கேட்பது பிரிவினை அல்ல. அரசுரிமை தான், ஆங்கிலேயர் தம் ஆட்சிக்காக இருபிரிவினரையும் ஒன்றிணைத்து ஆண்டார்கள். அதனைத்தான் நாம் இன்று கேட்கிறோம். அவர்கள் போய்விட்டார்கள் இனிஎமது நாட்டினை நாம் திருப்பிக்கேட்கிறோம். நாம் பலாத்காரமாக இதனைச்செய்யவில்லை. நாம் திரும்பவும் சுபிட்சம்பெற்ற இனமாக வாழவேண்டும்.சுதந்திரம் இருந்தால்தான் சுபிட்சம் கிடைக்கும் சமுதாயம் புனரமைப்பு செயல்படுத்தப் படவேண்டும். இதுஒருசிதறிய சமுதாயம். நாம் ஒன்றிணைந்து இயங்கவேண்டும்' என்றார்.

புத்தளம் டாக்டர் இலியாஸ் பேசுகையில், 'கிட்டத்தட்ட 5000 முஸ்லிம் வாக்காளர்கள் திருமலையில் இருப்பதாக அறிகிறேன் என்றும், இலங்கையில் எந்தஇடங்களிலுல் வசிக்கின்ற முஸ்லிமகளின் தாய்மொழி தமிழ்தான் என்றும், எப்படி கடந்த இனக்கலவரத்தின் போது தமிழர்கள் தாக்கப் பட்டார்களோ அதேபோல முஸ்லிம்களும் தாக்கப்பட்டுள் ளார்கள் என்பதனையும் நாம் ஒருபோதும் மறக்கமுடியாது' என்றும் கூறினார்.

### நல்லூர் 'சிவா'

நல்லூர் எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், 'விடுதலை என்ற சொல்லுக்கு இடமில்லாது தமிழரை ஒழிக்க திட்டமிட்டுக் கலவரத்தினை உண்டுபண்ணி தமிழன் எங்கிருந்தாலும் அவர்களை நாசப் படுத்தி அழிக்க எல்லாவிடமும் தாக்கினார்கள். எல்லாரையும் தாக்கினார்கள். தேர்தல் நடந்த சில தினங்களிலேயே அவை தொடங்கிவிட்டன. இதனை 'சன்சோனிக் கமிஷன்' வெளிப்படையாகக் காட்டுகின்றது. இதன்பின் தான் எம்இயக்கத்திற்குவலுத் தோன்றியிருக்கிறது. நாம் தேர்தலில் எப்படிக் கூறினோமோ அதேபோல்தான்நாம் நடக்கிறோம். அதிலிருந்து நாம் இதுவரை தவறவில்லை. தவறவும் மாட்டோம். செல்வத்துடன் வாழ்ந்தவர்கள் பலர் இன்று எல்லாம் இழந்து அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். எமது மத்தியில் ஒரு கட்டுப்பாட்டமைப்பு அவசியம்தேவை. இளைஞர்கள் அனைவரும் முன்வந்து பேரவைக் கிளைகள் அமைத்துத்தரவேண்டும்'என்றார்.

வணக்கத்துக்குரிய யோசேட் மேரி பேசுகையில், 'தமிழ் ஈழப ஒரு கடைசிமுடிவு என்றும், இதுமேடைப் பேச்சல்ல என்றும், படிப்படியாக நாம் நசுக்கப்பட்டதனையும் 30 வருட காலமும் ஒடுக்கப்பட்டதின் காரணமாகத்தான் நாம்இன்று தமிழ் ஈழம் கேட்கிறோம்' என்றும் கூறினார்.

### தனிக் கொடி

யாழ். எம்.பி. திரு வெ. யோகேஸ்வரன் பேசுகையில், 'சன்சோனிக் கமிஷன்'படி அறியவருவது இனிமேலும் நாம் ஒரு கொடியின்கீழ் வாழ முடியாது என்பதே. எமக்கு உரிமை வேண்டும். எமக்கு நம் உரிமைதேவை. நாம் தனிக் கொடிக்கீழ் வாழவேண்டும்' என்றார்.

மன்னார் எம். பி திரு சூசைதாசன் பேசுகையில். 'சமத்துவம் கேட்டோம், சமஷ்டி கேட்டோம், நாம் பிரிந்துசெல்லக் கேட்டோம். நமது உரிமைகளை மிக்க தாழ்மையுடன்கேட்கின்றோம் நமது இலட்சியம் நிறைவேறப் போராட்டம்தேவை. எமது இலட்சியம் நிறைவேறும்' என்றார்.

திருமலை தேசியப்பேரவை உறுப்பினர் திரு. இரா சம்பந்தன் தமது தலைமையுரையில், 'தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் வழங்கப்படவில்லை. தமிழ் ஈழம் கேட்பது நமது கடமை. இதனை நாம் கேட்பது தவறல்ல. எங்கள் இழந்தஉரிமைகளைப்பெற நாம் என்னநடவடிக்கைகளையும் எடுப்போம். அதனை எவரும் தடுக்கமுடியாது, தமிழர்கள் பூரண ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள். நான் ஒரு தேசியப் பேரவை உறுப்பினர் என்றமுறையில் எனதுதொகுதிமக்களுக்கு நான் எந்த உதவியையும் செய்யத் தவறமாட்டேன்' என்றார் திருமலையில் இதுவரையில் த வி கூ 12 கிளைகள்தான் உண்டு என்றும் மேலும் 24 கிளைகளைஸ்தாபிக்கவேண்டும் என்றும் அப்போதுதான் அரசியல் இலட்சியத்துக்கும் மக்களுக்கிடையிலும் விளக்கமிருக்கும் என்றும் கூறினார்.

'சிலர் என்னை அரசாங்கத்துடன் சேருவேன் என எண்ணியுள்ளார்கள் என்றும் தான் ஒருபோதும் அப்படிச் செய்யப்போவதில்லை என்றும் கூறினார். (உ)

### மின் வசதி கிடைக்குமா?

[சுழிபுரம்]

பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோயிலுக்கு மின்சாரவசதி இன்னமும் வழங்கப்படவில்லை சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் உள்ள சகல ஆலயங்களும் மின்சாரம் பெற்று பயன்படுகையில், பண்ணாகம் விசவத்தனை முருகன்கோயில் ஒன்று மட்டுமே மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோர் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டுள்ளதைத்தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. [உ]

## வர் விளம்பரம்

### தேவை

யார்க்கரு விநாயகர் தேவஸ்தானத்துக்கு சிவாசாரியர் ஒருவர் தேவை. வெள்ளி, சனி. ஞாயிறு நாட்களில் நேரில் வரவும். மனேஜர், யார்க்கரு விநாயகர் தேவஸ்தானம், கரவெட்டி. 8578

நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தக்கூடிய அனுபவமுள்ள மெக்கானிக் வவனியாவில் உள்ள ஸ்தாபனம் ஒன்றுக்குத் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 8626, மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம் 8626

மின்சார வயறிங் வேலைகளில் குறைந்தது 10 வருட அனுபவமும், ஆங்கிலம், தமிழ் வாசிக்க எழுத ஓரளவு தெரிந்திருப்பதுடன், 20 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்ட எலெக்ரிசியன் தேவை. சகல விதமான கட்டிட வயறிங், சகல மோட்டார் வயறிங் வேலைகள் செய்த அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். நாட்சம்பளமாகவோ மாதச் சம்பளமாகவோ வேலை தரப்படும். சம்பளத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடவும் நியூ எலெக்ரோனிக்ஸ். 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8616

சகலவிதமான பைப் பிற்றிங் (Pipe fitting) வேலையில் குறைந்தது 10 வருட அனுபவமுள்ள பைப் பிற்றர்கள் உடனடியாகத் தேவை. (வயது 20-40 உட்பட்டவர்கள்) சகல கட்டிடங்களிலும் பைப்புகள் அமைப்பதற்கும், மின்சார பம்புகளுக்கு பைப்வேலைகள் செய்வதற்கு அனுபவச் சான்றிதழ்களுடன் விரும்பும் சம்பளத்தையும், நாட் சம்பளமாகவோ, மாதச் சம்பளமாகவோ தேவை என்பதையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவும். நியூ எலெக்ரோனிக்ஸ், 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8615

### காணவில்லை

23 ஸ்ரீ 2613 என்ற பஸ்ஸில் வேலணையில் இருந்து குறிகட்டுவானுக்கு 24-2-78ல் 2 மணிக்குப் போன பஸ்ஸில் ஒரு அடியார் தனது மூக்குக் கண்ணாடியைத் தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தவர் தயவுசெய்து V பொன்னையா 3ம் வட்டாரம். புங்குடுதீவு எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். ஒப்படைப்போருக்குத் தகுந்த சன்மானம் தரப்படும். 8628

கறுப்பு நிற அல்சேஷன் நாய்க்குட்டி ஒன்றைக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் காணவில்லை. கழுத்தில் நீலக் கயிற்றுடன், கண்கள், கழுத்தின் கீழ்ப் புறம், கால்களில் வெள்ளை நிறமுள்ள இந்த நாய்க்குட்டியைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் ப பரிராசா. சட்டத்தரணி, உடுவில் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 8627


## வேலைவாய்ப்பு வழிகாட்டும் ஸ்தாபனம்

தொழில் பெறுவதற்கு உதவிவேண்டுவோரும், வேலைவாய்ப்புக்காக தொழில்திறமைப்பயிற்சிதேவைப்படுவோரும், கீழ்க்கண்ட விலாசத்திடமிருந்து அதற்கான பத்திரங்களைப் பெறும்படி கேட்கப்படுகிறீர்கள்.

வேலைவாய்ப்பு வழிகாட்டும் ஸ்தாபனம்

இல. 127, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

8578


கூட்டணியின்

## வட்டு. பிரகடனத்தின் 2வது மாநாடு ஏப்ரலில்

### கோப்பாய் எம். பி. தகவல்

[யாழ்ப்பாணம்] தமிழர் விடுதலைக்கூட்டணியின் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் இரண்டாவது மகாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புத்தூர்கிளை புனரமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

திரு. மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எம். பி திரு கதிரவேலுப்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

திரு. மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எம். பி. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில், விடுதலை இயக்கத்தை ஊக்குவிப்பதும், ஊர் அபிவிருத்திக்கு உழைப்பதும் இக்கிளைகளின் கடமைகள் என்றும், கலவரத்தின் பின் தெற்கிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று வரை

[5ம் பக்கம் பார்க்க]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B 13605

சரவணமுத்து சுப்பிரமணியம்,
இடைப்பிட்டி, காரைநகர்.

வழக்காளிகள்

எதிராக

செல்லத்துரை வைத்திலிங்கம்
கைம்பெண் இராசமணி, சிறுப்பிட்டி.

எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 13605 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 6600/- 17-1-73 தொடக்கம் 10-7-73 வரை ரூபா 5000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 499-55.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை உப்புவானசிமா, பரப்பு ஐந்து குளி பதினாறில்ஏழு 5 7/16 நெற்காணி இதற்கு எல்லை கிழக்கு மூத்ததம்பி அருணாசலத்தினுதனம், வடக்கு நமசிவாயம் கைம்பெண் நல்லபிள்ளையின் ஆதனம், மேற்கு ச தம்பிப்பிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம், தெற்கு வல்லிபுரம் மாணிக்கத்தின் ஆதனம், இதடங்கலும் பதிவு இலக்கம் K 287 113.

மேற்காட்டியபடி சிறுப்பிட்டியிலுள்ள பன்னாலையும் கவிலாச்சியும் என்னும் இரண்டரை நிலப்பரப்புக் காணி இதற்கு எல்லை கிழக்கு அம்பலம் சின்னத்தம்பியினதும் அம்பலம்நீலையினாரின் உரித்தாளர்களினது ஆதனமும் கைஒழுங்கையும் வடக்கு வல்லிபுரம் குமாரவேலுவினதும், அம்பலம் வினாசித்தம்பியினதும் ஆதனம், மேற்கு வினாசித்தம்பி பெண் சின்னச்சிப்பிள்ளையினதும் கனகர் பெண் தெய்வானையினது ஆதனம், தெற்கு வல்லிபுரம் குமாரவேலு பெண் செல்லத்தின் ஆதனம் இதில் தெற்குப்புறம் அடங்கிய வீடும் அத்துடன் கொடுத்த தலவாசலும் அங்கு உள்ள கிணற்றில் பங்கும் தூர்வை வழி இது அடங்கலும் சொரியலாக அரைப் பங்கு பதிவு இல. K 287 112.

சி. சோ. நரசிங்கம் ஜே. பி.,
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்.

தொல்புரம்,
18-1-78.

8629

ஈழநாடு
The Eelanaadu

## தபால், தந்தி தொலைபேசிச் சேவை

கடந்த சில வருடங்களில் தபாற் கட்டணம், தந்திக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால் தபால், தந்தி, தொலைபேசிச் சேவைகள் மட்டும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே இருக்கிறது.

ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திலுள்ள ஒருவருக்கு அனுப்பிய தபால், பல நாள் நத்தையையும்விட மோசமாகப் பயணஞ்செய்து போய்ச் சேர்ந்தது என்ற செய்திகளை அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கலாம்.

புறப்பட்டு வருவதாக, ஒருநாள் முன்னதாக அனுப்பப்படும் தந்தி, அவர் வீடு வந்து சேர்ந்தபின், அவரே அத்தந்தியைப் பெறும் வேடிக்கையையும் இங்கு காணலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள வேண்டுமானால், பகலில் பத்து மணி நேரம்; இரவிலானால் ஐந்து மணி நேரம் காத்திருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புடன் தொலைபேசியில் தொடர்புகொள்வதென்பது அபூர்வமான சம்பவம்.

கொழும்பிலிருந்து பம்பாய், டில்லியுடனும், லண்டன், நியூயோர்க்குடனும் சில நிமிட நேரத்தில் தொலைபேசியில் தொடர்புகொண்டுவிடலாம்; ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புடனோ, மட்டக்களப்புடனோ தொடர்புகொள்வது பெரும் கஷ்டம்.

தபால், தந்தி, தொலைபேசிச் சேவைகள் சீராகிவிடுமென்றும், யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் நேரடித் தொலைபேசித் தொடர்பு வசதி செய்யப்படுமென்றும் முன்னைய தபால் அமைச்சர் அடிக்கடி கூறி வந்தார். இன்றைய தபாற் தந்தி அமைச்சரும் கூறிவருகின்றார்.

ஆசிய நாடுகள் பலவும் தபால், தந்தி, தொலைபேசிச் சேவைகளில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் செய்மதி மூலம் தொலைபேசிச் சேவை சுலபமாக நடைபெறுகிறது.

அயல் நாடான இந்தியாவில் இது போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ள இக்காலத்தில், நாம் மட்டும் தபால், தந்தி, தொலைபேசிச் சேவையில் இன்னமும் கட்டை வண்டிக் காலத்தில் நிற்க வேண்டுமா?

## கிளை புனரமைப்பு

[வவுனியா]

வவுனியாத் தொகுதியில் தமிழ் இளைஞர் பேரவைக் கிளை புனருத்தாரணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

திரு. சச்சா செல்வராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐந்து நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். [உ

### மட்டக்களப்பில்

# பூரண பல்கலைக்கழகம் அடுத்தமாதம் திறக்கப்படும்

## அமைச்சர் தேவநாயகம் தகவல்

[மட்டக்களப்பு]

"இந்த நாட்டிலுள்ள 1½ கோடிக்குப்பன்களில் 70லட்சம் கூப்பன்களை அரசாங்கம் திருப்பி எடுத்ததைக் குறித்து தவறான விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்நிய நாடுகளிடம் பெறும் உதவிகளை நம்பி இந்த நாடு வாழக்கூடாது நாடு பூராவும் உள்ளவர்களில் 70 லட்சம் பேர் உழைப்பாளிகள். ஆகவே அரைவாசிப்பேர் வியர்வை சிந்திப்பெறும் உழைப்பில் தங்கியிருக்கக்கூடாது என்பதற்காகவே இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. வெகு விரைவில் நாட்டில் சுதந்திர வர்த்தக வலயம் ஏற்படும் இதன்பின்னர் சகலரும் சுபீட்சமுடன் வாழ்வதற்காக எமது தலைவர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா நடவடிக்கை எடுத்தார்"

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் மேற்கண்டவாறு கூறினார் இவ்வைபவம் கிழக்குப் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். ஏ. மஜீது தலைமையில் கல்லூரி "குரேவ்ட்" மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் கலந்துகொள்வதற்கென தமது பாரியாருடன் அமைச்சர் வருகை தந்திருந்தார். அமைச்சர் தம்பதிகளை கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் மாணவிகள் "பாண்ட்" வாத்தியம் இசைத்து அணி வகுத்து நின்று வரவேற்றனர்.

### தரப்படுத்தல்

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தரப்படுத்தல் முறை நீக்கப்பட்டதை ஒரு காரணமாக வைத்து நாட்டில் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதற்காக மாணவர்களைப் பகடைகளாகப் பாவித்து வருகிறார்கள். எதிர்கால சந்ததியினரான மாணவ சமுதாயம் அரசியல்வாதிகளின் ஆசைவார்த்தைகளில் கட்டுண்டு எதிர்காலத்தைப் பாழாக்காமல் கட்டுப்பாட்டுடன் கல்வியில் தொடர்ந்து முன்னேறி பிறந்த மண்ணுக்குப் பெருமைதேடித் தரல் வேண்டும்."

"நீண்டகாலமாக எமது பிரதேசம் அபிவிருத்தி குன்றிய நிலையில் இருந்துவருகின்றது. இந்நிலை நீங்கி நம்மை நாமே ஆளும் நிலை ஏற்படல்வேண்டும். அதாவது சகல வசதிகளும் கொண்டவர்களாக கிழக்கு மாகாணம் தலைநிமிர்ந்து வாழவேண்டும். மட்டக்களப்பு பிராந்தியத்தில் குறிப்பாக விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றாக்குறை விரைவில் நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டுள்ளது."

"எடுத்ததற்கெல்லாம் நமது பிரதேசம் ஏனையவர்களது பிரதேசத்தில் தங்கியிருந்த நிலைமையை நாம் விரைவில் மாற்றியமைப்போம். இந்த நாட்டில் மாணவர்கள் சமகல்வி, பாரபட்சமற்ற வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கான வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்தவுள்ளது. இத் திட்டத்தின் முன்னோடி நடவடிக்கைகளில் ஒன்றாகவே கடந்த அரசாங்கம் அமுல்நடாத்திய அநீதியான தரப்படுத்தலை நாம்நீக்கினோம் ஆங்கில மொழிப் பயிற்சியென்றால் யாழ்ப்பாணத்துக்கும் விவசாயநெறிப் பயிற்சியென்றால் கண்டிக்கும் செல்லவேண்டிய நிலை இனிமேல் இருக்காது. கிழக்கு மாகாணத்தில் சகல வசதிகளும் கொண்ட தேசியப் பல்கலைக்கழகம் அடுத்தமாதத்தில் திறக்கப்படவுள்ளது.

### அதிகார மூலமே சாத்தியமாகும்

"நாமும், எமது பிரதேசமும் முன்னேறி சுபீட்சமடைய வேண்டுமெனில் அதிகாரமூலமாகவே அது சாத்தியப்படும். மனிதன் தனித்துவாழ்வதனால் முன்னேற்றமடைய முடியாது. மனிதன் பேசும்மொழியினால் இரண்டாந்தரப் பிரஜையாக இருக்கமுடியாது. 1956ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் நிலவிவரும் மொழிப் பிரச்னையை அரசியல் சாசனத்தின் மூலம் திருத்தி அமைப்பதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் தமிழ் சிங்கள முஸ்லீம் இனப் பிரச்னைக்கும், மொழிப் பிரச்னைக்கும் விரைவில் சாவுமணி அடிக்கப்படும்"

அமைச்சரின் பாரியாரான திருமதி மகேஸ்வரி தேவநாயகம் பரிசில்களை வழங்கினார். [அ]

### "சுதந்திர ஆட்சியில் எமது இழப்பு

## அந்நியராட்சிக் காலத்திலும் பல மடங்கு அதிகம்"

(வட்டுக்கோட்டை)

"கடந்த முப்பது ஆண்டுகளில் ஆளும் இனத்தால் தமிழனுக்கு ஏற்பட்ட அழிவு, அந்நிய ஆட்சியின்கீழ் நாமிருந்த நூற்றாண்டுகளிலும் ஏற்பட்ட அழிவிலும் அதிகமானது. அந்நிய ஆட்சியின்கீழ் எமது மதம் மாற்றப்பட்டாலும் மொழி மாற்றப்படவில்லை. ஆனால்இப்போது தமிழனின் வாழ்வே ஆட்டம் காணக்கூடிய அளவிற்கு அவனது மொழி, மதம், நிலம் என்பன திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் காரைநகரில் திரு. வே. பரஞ்சோதி தலைமையில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார் இக்கருத்தரங்கு காரைநகர் மேற்கு த. வி. கூட்டணிக் கிளையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஈழவேந்தன் தொடர்ந்து பேசுகையில், நாம் இழந்த எமது தமிழ் ஈழ மண்ணை மீட்டு சுதந்திரம் பெற்ற இனமாக வாழ்வோம் என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும் என்றும், எம்மிதுள்ள நம்பிக்கையீனம்தான் எம்மினத்தின் தாழ்விற்கு அடிப்படைக் காரணம் என்றும், விஜயன் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்னரே இங்கு வாழ்ந்துவந்தவர்கள் தமிழர்கள் என்றும். இலங்கை என்பது இரண்டு தேசிய இனங்களையும், இரண்டு நாடுகளையும் கொண்ட ஒரு தீவாகும் என்றும், பாகிஸ்தான், வங்காள தேசம் ஆகிய நாடுகள் வரலாற்றுப் பின்னணியே இல்லாத நிலையில் பிரிந்து செல்ல முடியுமானால் தமிழ் ஈழ மண்ணை ஆண்டவர்கள் என்ற வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட நாம் ஏன் இதை நிலைநாட்டமுடியாது என்றும் கூறினார்.

ஈழவிடுதலை முன்னணி போன்ற தமிழ் ஈழ விடுதலை அமைப்புகள் உலக நாடுகளில் மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்ற அதேவேளையில் இங்கு இயக்க அமைப்புக்களில் அசமந்த போக்குக் காணப்படுவதாக திரு கோவை மகேசன் பேசுகையில் கூறினார். [அ]

## கருத்தரங்கு

[வவுனியா]

ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்களுக்கான கருத்தரங்கு இன்று வவுனியாக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகிறது.

இக்கருத்தரங்கில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பொ. கமலநாதன், திரு. எஸ். நித்தியானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். இக்கருத்தரங்கின் கலந்துரையாடலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கு வைப்பு முறை, நிதி நிர்வாக முறை, கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்களுக்கான பொறுப்புக்கள், அதிகாரங்கள் என்பன இடம் பெறும். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாட்டை மாவட்டச் செயலாளர் திரு. ஆ. மகேஸ்வரா செய்துள்ளார். [உ]

## மணிவாக்கு

கடவுளால் படைக்கப்பட்ட மனிதனுக்குப் பணி செய்வதன் மூலமே நாம் அவரைத் திருப்திப்படுத்தலாம் — போற்றலாம்.

— காந்திமகான்

## 'கேர்ணல் அமிர்தலிங்கம்'

[திருமலை]

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு திருகோணமலையில் மகுடம் சூட்டி "கேர்ணல் அமிர்தலிங்கம்" என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

திருகோணமலை முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாபெரும் கூட்டத்தில் வைத்து உப்புவெளி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைச்செயலாளர் திரு. பத்மநாதனால் இப்பட்டமளிக்கப்பட்டது. [உ]

## மருந்துகள் வந்தன

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமசபை ஆயுர்வேத இலவச வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்து வகைகள் வந்துசேர்ந்துள்ளன இலங்கை ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள இம்மருந்து வகையில் கலவைகள், எண்ணை வகைகளில், தூள் மருந்துகள் யாவும் அடங்கியுள்ளன.

ஆசிரியருக்குக் கடிதம்

## யாழ்.சந்தை வியாபாரம்

"ஈழநாடு" பத்திரிகையின் 9-1-78 அன்று ஆசிரியருக்குக் கடிதம். பகுதியில் வெளியான செய்திபடிக்க நேர்ந்தது. யாழ் பட்டண சந்தைக் குத்தகையை இவ்வருடம் எடுத்தவன் என்கின்ற முறையில் அதற்குப்பதிலளிக்க வேண்டியவனாயுள்ளேன். போனவருடக் குத்தகையை விட இம்முறை நான் கூடிய குத்தகைக்கு சந்தையை எடுத்துள்ளேன். இருப்பினும், முன்னையவருடம் ஒவ்வொரு வியாபாரியிடமிருந்தும் எவ்வளவு வாடகைபணம் அறவிடப்பட்டதோ அதேஅளவு பணமே இப்பொழுதும் வசூலிக்கப்படுகிறது. ஆனால் நான் இதற்குப்புதியவர் என்கின்றமுறையில் இதைவசூலிப்பதில் எனக்கு சில வியாபாரிகள் ஒத்துழையா வேளையிலும், மிகவும் கண்ணியத்துடனேயே நடந்துவருகின்றேன். எனவே அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதிகபணம் வசூலிக்கவோ அன்றி பொருட்கள் தூக்கி எறியப்படும் என்ற பயமுறுத்தலோ நான் செய்யவில்லை யாரோ விஷமிகளின் தூண்டுதலின் பேரில் அக்கடிதம் எழுதப்பட்டிருக்கலாம் என நம்புகிறேன்.

மேலும், அங்கு வேலைசெய்யும் மாநகரசபை ஊழியர்களும் இதற்கு உடந்தை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆனால். மாநகரசபை ஊழியர்களிடத்தில் சிலர் வாடகைப்பணம் தரமறுக்கும் நிலைமையையும், சிலவியாபாரிகள் நடந்துகொள்ளும் முறையையும் பற்றிக் கூறியும் கூட, புதியவனான எனக்கு அவர்கள் எதுவித ஒத்துழைப்பையும் நல்க முன்வரவில்லை. இதுவே உண்மையானது. கூடியளவு வியாபாரிகள் எனக்கு பணம் அறவிடுவதில் ஒத்துழைப்பு தருகின்ற வேளையிலும், ஒருசிலரான வியாபாரிகள் மட்டும் பிற சந்தைத் தரகர்களின் தூண்டுதலாலோ என்னவோ விஷமிகளாக நடந்து வருகின்றனர். நான் இதுபற்றி மாநகரசபை ஆணையாளருக்கும் கடிதம் எழுதியுள்ளேன். மாநகரசபை ஆணையாளர் உண்மைநிலையினை அறிந்து, இவ்விடயத்தில் எனக்கு ஆவனசெய்ய முன்வருவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

கே.மகேந்திரன்
யாழ்ப்பாணம்.

## போயாதோறும் சைவசித்தாந்த வகுப்பு

(வட்டுக்கோட்டை)

ஏழாலையைச்சேர்ந்த சைவசித்தாந்தப் பேரறிஞர் பண்டிதர் மு. கந்தையா காரைநகர் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு போயா தினங்களிலும் சைவசித்தாந்த வகுப்புகளை இலவசமாக நடாத்தி வருகின்றார். இவ்வகுப்புக்களில் காரைநகரையும், அயலூர்களையுஞ்சேர்ந்த பலர் கலந்துகொண்டு பயனடைகின்றனர்.

(அ)

## மகஜர்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அரசாங்க பாடசாலையில் கடமையாற்றிய உதவி அதிபர் திரு. டானியலின் இடமாற்றத்தை உடனடியாகரத்துச்செய்து அவரை அதே பாடசாலையில் கடமையாற்ற அனுமதிக்குமாறு சண்டிலிப்பாய் ஐ.தே.க. கிளைத் தலைவர் திரு. எம். சபாம்பிள்ளை, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரை மகஜர் மூலம் கேட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் அபிவிருத்தி பற்றிய மற்றும்சில கோரிக்கைகளையும் அவர் இம் மகஜரில் குறிப்பிட்டுள்ளார். (உ)

## கர்நாடகத்தில் கிடைத்த பெருவெற்றி:

# இந்திரா காந்திமீது மக்கள் கொண்ட

## நம்பிக்கையை பறைசாற்றுகிறது

### பொதுச்செயலாளர் அறிக்கை

புதுடில்லி, பெப்.27

'கர்நாடக மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த பெருவெற்றி, எமது கட்சியின் கொள்கை மீதும் எமது தலைவி திருமதி இந்திரா காந்திமீதும்மக்கள்வைத்துள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையைப் பறைசாற்றுகிறது.'

இவ்வாறு இந்திராகாங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. பூட்டாசிங் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் திரு. பூட்டாசிங் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:-

கர்நாடக மாநிலத்தில் திருமதி காந்தியின் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்தவெற்றி எமது கட்சியின் ஜனநாயகம், சோஷலிசம் சமயசார்பின்மை ஆகியகொள்கைக்குக்கிடைத்த பெருவெற்றியாகும்.

மக்களின் கட்டளையை ஏற்றுக்கொள்ளும் நாம் எமது ஜனநாயகப்பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்வோம். (இ)

## சபாநாயகர் தோல்வி

பெங்களூர், பெப்.27

கர்நாடக மாநிலத்தில் கலைக்கப்பட்ட சட்டசபையின் சபாநாயகர் திருமதி கே. எஸ். நாகரத்தினம்மா 72வாக்குகளால் தோல்வி அடைந்துள்ளார்.

இம்மாநிலத்தில் போட்டியிட்ட 29 பெண்களில் 6 பேர் வெற்றியடைந்துள்ளனர். இவர்களுள் 4 பேர் இந்திரா காங்கிரஸையும் 2 பேர் ஜனதா கட்சியையும் சேர்ந்தவர்களாவர். (இ)

## 8 அநாதைக் குழந்தைகள் குளத்துக்குப் பலி!

புதுடில்லி, பெப் 27

புதுடில்லி சாந்தி பவனத்தில் உள்ள குளம் ஒன்றில் குளிக்கச்சென்ற 8 அநாதைக் குழந்தைகள் குளத்துக்குப்பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

புதுடில்லி அநாதை இல்லத்தைச் சேர்ந்த 10 குழந்தைகள் குளிக்கச்சென்றதாகவும் அவர்களில்8பேர் குளத்தில் மூழ்கியதை அடுத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது உயிர் பிரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## "சமுதாயத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லது இலக்கியம்"

[யாழ்ப்பாணம்]

"சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் தொடர்புண்டு. இலக்கியம் மூலம் சமுதாயம் நன்மையடைந்து வந்துள்ளது. எழுத்தாளர்கள் படைப்புக்கள் சமூகத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி பரிகாரம் தேட உதவிசெய்கின்றன, நிறைவுகளைக் கூறி சமுதாயத்தை மேன்மையுறவும் செய்கின்றன. ஆகவே சமுதாயத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லது இலக்கியம்" யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில், தமிழ்இலக்கிய மன்றத்தினை குத்துவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைத்த திணைக்கள கல்விப் பணிப்பாளர் திரு.ரி. மாணிக்க வாசகர் தலைமையுரைநிகழ்த்துகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலே உள்ள அரசாங்க திணைக்களங்களிலே முதன்முதலாக இத்திணைக்களத்திலேயே இப்படியான ஒரு 'தமிழ் இலக்கிய மன்றம்' ஆரம்பமாவது குறிப்பிடக்கூடியது. இந்தியா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாட்டிலே சுதந்திரம் அடைவதற்கு முக்கிய கருவியாக இருந்தது எழுத்தாளர்களே. மேலும் இம் மன்றம் பல எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும் முத்தமிழுக்கும் விழாவெடுக்கவேண்டும்" என்றார்.

# சிவாஜி திருமலை வருவார்?

[திருமலை]

இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பான "பைலட் பிரேம்நாத்" படத்தில் கதாநாயகனாக நடிக்க இலங்கை வந்துள்ள நடிகர்திலகம் சிவாஜி கணேசன் திருமலைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருமலையிலும் இப் படத்திற்கான காட்சிகள் இடம் பெறவுள்ளனவாம். (உ)

# மத்திய கிழக்கு சமாதான முயற்சிக்கு இஸ்ரேல் முட்டுக்கட்டை

## பாலஸ்தீன விடுதலை இயக்கம் குற்றச்சாட்டு

கெய்ரோ, பெப்.27

மத்தியகிழக்கு சமாதான முயற்சிக்குஇஸ்ரேல்மீண்டும் முட்டுக்கட்டைபோட்டு வருகிறது.

இவ்வாறு பாலஸ்தீனவிடுதலை இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஜோர்டான் ஆற்றின் மேற்குக் கரையில் இஸ்ரேலியர்களைக் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதன் மூலமே இஸ்ரேல் மத்தியசமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட்டுவருகிறது என்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் எகிப்திய சபாநாயகரும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாகக் கருத்துத்தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களின் விடுதலைக்கு எதிராக சில பொறுப்பற்ற சக்திகள் செயல்பட்டு வருகின்றன என்றும் அவற்றை அழிக்க சகல அரபுநாடுகளும் ஒன்றுபடவேண்டும் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். [இ]

## வட்டு. தொகுதிக்கு தனி உதவி அரசாங்கஅதிபர்

### எம். பி. தகவல்

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டைத் தொகுதிக்குத் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது. இது வட்டுக்கோட்டை உதவி அரசாங்க அதிபர் பிரிவு என அழைக்கப்படும். இதற்குரிய காரியாலயம் சித்தன் கேணியில் அமையும்.

இத்தகவலை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு சித்தன்கேணி த.வி.கூ.காரியாலயத்தில் தொகுதி அபிவிருத்திபற்றி ஆராய்வதற்காகக் கூட்டப்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

தற்போது இத்தொகுதியைச் சேர்ந்த மக்கள் ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மூலம் தமது அலுவல்களைக் கவனித்து வருகின்றனர். [அ]

# ஊரிக்கிராமம் அபிவிருத்தியடைகிறது

[காரைநகர்]

காரைநகரில் பின்தங்கிய கிராமமாக இருந்து வந்த ஊரிக்கிராமம் தற்போது நோர்வே சுவீடன் தேசத்து கிளெண்தாமனமான ஊசி நல்லொழுக்க வாலிபர் இயக்கத்தினரால் அபிவிருத்தி வேலைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வியக்கம் நோர்வே சுவீடன் நாட்டு நல்லொழுக்க வாலிபர் இயக்கத்தின் உதவியுடன் இக்கிராமத்தவர்களுக்குக் குழாய் நீர்த்திட்டம், வீட்டுத்திட்டம் போன்ற திட்டங்களை மேற்கொண்டுள்ளது. குழாய் நீர் விநியோகத்திற்கான பைப்புகளும் நோர்வே நாட்டிலிருந்து இங்கு வந்து சேர்ந்துள்ளன. வீட்டுத் திட்டமும் கூடியவிரைவில் செயல்முறைப்படுத்தப்படவிருக்கிறதாம். மேலும் இவ்வியக்கம் இக்கிராமத்தவர்களுக்கு ஊரிகிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்தில் சிறுவர் கல்வி ஆங்கில வகுப்பு, சங்கீத வகுப்பு, தையல் வகுப்புப் போன்றவற்றையும் நடாத்தி வருகின்றனர். [அ]

......

## தேநீர் விருந்து அளித்தனர்

[வவனியா]

பிரான்சிலிருந்து இலங்கை வந்துள்ள உதைபந்தாட்டக் கோஷ்டியினர் திருமலை சென்று யாழ்ப்பாணம் செல்லும்போது வவனியாவில் வவனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் திரு. ரீ. எம். ஏ. பொன்கலனுடனும், மற்றும் சங்க உறுப்பினர்களுடனும் உதைபந்தாட்ட முன்னேற்றம் பற்றி கலந்துரையாடினார்கள்.

அவர்களுக்கு வவனியா மகாவித்தியாலயத்தில் வவனியா உதைபந்தாட்டச் சங்கத்தினால் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது [உ

## ரயில் விபத்து: 53 பேர் பலி

ஆர்ஜன்டீனா, பெப். 27

ஆர்ஜன்டீனாவில் நடைபெற்ற ரயில் விபத்து ஒன்றில் 53 பேர் பலியானார்கள் என்றும், 56 பேர் படுகாயம் அடைந்தனர் என்றும் அறிவிக்கபபட்டது.

ஆர்ஜன்டீனாவில் இதுவரை நடைபெற்ற விபத்துக்களில் இதுவே மோசமான விபத்து என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

—

## 3 தடவை ரயில்கள் தடம் புரண்டன

நியூயோர்க், பெப். 27

அமெரிக்காவில் கடந்த 5 நாட்களில் 3 தடவைகள் ரயில் தடம் புரண்டதாக அறிவிக்கப்பட்டது:

நியூயோர்க்குக்கு அருகில் இச்சம்பவங்கள் இடம்பெற்றனவாம்.

முதல் விபத்தில் 11 பேரும் 2வது விபத்தில் 8 பேரும் கொல்லப்பட்டனர்; கடந்த இரவு நடைபெற்ற விபத்தில் எவரும் பலியாகவில்லை: (இ)

## கொக்குவில் பஸ் பிரயாணிகள் சங்கம்

[யாழ்ப்பாணம்]

"சிரமதான முறையில் பிரயாணிகளாகிய நாமே தெருக்களைச் செப்பனிடுவது சாலச் சிறந்ததாகும்" என்று கொக்குவில் கிழக்கு பஸ் பிரயாணிகள் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பொற்பதியில் சட்டத்தரணி திரு. பொன். காங்கேயன் தலைமையில் நடைபெற்றபோது திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

தூதுகோஷ்டி ஒன்று சென்று பிரயாணிகளின் முறைப்பாட்டை நிவர்த்திக்க, இ. போ. ச. அதிகாரிகளைப் பேட்டி காணவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. [உ]

## கடுகதி பஸ் சேவை

[சுழிபுரம்]

இலங்கைப் போக்குவரத்துச் சபை காரைநகர் டிப்போவினால் தினமும் அதிகாலை கடுகதி பஸ் சேவையொன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இச்சேவை காரைநகர் சுருவிலிருந்து காலை ஏழு மணிக்கு புறப்பட்டு 782 இலக்கப் பாதையால் வழமையாகவுள்ள சகல பஸ் தரிப்பு நிலையங்களிலும் நிற்காது, அதிமுக்கிய பஸ்தரிப்பு நிலையங்களில் மட்டும் நிறுத்தப்படுகின்றது. இப்பஸ்சேவை பலருக்கும் நன்மையாகவுள்ளது. [உ]

......

## பொதுநலத் திட்டம் கருதி...

[பண்டத்தரிப்பு]

கலைநிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டி வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பொதுநலத் திட்டங்களுக்கு உதவி செய்வதென்ற தீர்மானம் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக விசேட கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பண்டத்தரிப்பிலுள்ள வாழ்வொளி நிலையத்தின் அபிவிருத்திக்கும், சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு மின்சார இணைப்பு ஏற்படுத்துவதற்கும் முதற்கட்டமாக நிதி உதவி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பஸ் தரிப்பு நிலையங்கள்

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் மூன்று பஸ்தரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

மூளாய் பிள்ளையார் கோவிலுக்குஅருகாமையில் அமரர் டாக்டர் இ. நிற்சிங்கம் நினைவாகவும், தொல்புரம் பாணுவெட்டியில் அமரர் விதானை செ. கந்தையா நினைவாகவும், வழக்கம்பரையில் அமரர் செ. சபாநாயகர் நினைவாகவும் நினைவு மண்டபங்கள் கட்டப்பட்டு பஸ் தரிப்பு நிலையங்களாகப் பயன் படுத்தப்படுகின்றன. மூன்று மண்டபங்களும் சுமார் பத்தாயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளன. டாக்டர் எஸ். நிற்சிங்கம், செ. சபாநாயகர் ஆகியோர் நினைவாகக் கட்டப்பட்ட மண்டபத்தை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திறந்துவைத்தார். [உ]

## பிரிவுபசாரம்

[திருமலை]

திருகோணமலை கூட்டுறவு மொத்த விற்பனவுப் பிராந்திய முகாமையாளர் திரு. அசல்லே கொழும்புக்கு இடம் மாற்றலாகிச் சென்றுள்ளார். இவர் 1976ல் முதன்முதலாக திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுமொத்த விற்பனவுநிலையத்தில் ஆரம்பம் தொடக்கம் சிறந்தமுறையில் சேவைசெய்துள்ளார்.

இவரின் சேவையினைப் பாராட்டி நிலைய உத்தியோகத்தராலும் மறுநாள் தொழிலாளர்களாலும் பிரிவுபசாரக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

திருமலை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி முதலாளேர் இவரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார் [உ]

Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
MICHAEL CAINE
in
The Romantic English Woman
(Color)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்-Adults only)

Rio (Jaffna) Daily 4 shows
Phone: 7607
COUNT DOWN TO DOOMSDAY
Also: Latest News-See Ravi Shankar in Action

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன் — சாரதா
நடித்த
துலாபாரம் [தமிழ்]

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ்.நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9 45
பஷிராஜாவின்
மரகதம் சிவாஜி — பத்மினி நடித்த
(புதிய பிரதி)
28-2-78 நிதியுதவிக்காட்சி பி. ப. 2-30 மட்டும்
மருதநாட்டு வீரன்

ராணி தினசரி 4 காட்சிகள்
[யாழ். நகர்] வி. பி. கணேஷன் — சுபாஷினி
நடித்த
நான் உங்கள் தோழன்
3-3-78 முதல் குதூகல ஆரம்பம்
ஜெய்சங்கர்—ஜெய்சித்திரா நடித்த
பணக்காரப் பெண்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் 71-வது தினம்
(யாழ்ப்பாணம்)
அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க
இன்ஸ்பெக்டர் மனைவி
3-3-78 முதல் ஜெமினி, பத்மினி, ராதா நடித்த சித்தி

சாதனை படைக்கும்
100வது நாள் இன்று
வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓம். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

# கூட்டுத் தயாரிப்பு

## ஒரு கேலிக்கூத்தாம்

(யாழ்ப்பாணம்)

''ஈழத்துக் கலைஞர்கள் தங்கள் தனித்துவத்தை இழக்காமல், தங்கள் திறமையை அடகு வைக்காமல் கூட்டுத் தயாரிப்பைப் பகிஷ்கரிப்பதே நல்வழியாகும்.''

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் பேரவையைச்சேர்ந்த பல்கலைமணி திரு. சி. க. தம்பிராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பு என்ற பெயரில் 'பைலட் பிரேம்நாத்', திரைப்படத்தை இலங்கையிலும் இந்தியாவிலும் இருநாட்டுக் கலைஞர்களையும் கொண்டு தயாரிப்பது பற்றிய செய்தி காதுக்கு இனிமையாக இருக்கின்றது. ஆனால் உண்மை நிலையை ஆராயின் தயாரிப்பாளர்கள் இலங்கைக் கலைஞர்களை ஏமாற்றி விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். தொழில் நுட்பக் கலைஞர்களைக்கூட இந்தியாவிலிருந்தே கொண்டுவந்துள்ளனர். கதாநாயகன், இரண்டாவது கதாநாயகன், நகைச்சுவை நடிகர்கள், பிரதான நடிகர்கள் எல்லோரும் இந்தியாவிலிருந்தே வந்துள்ளார்கள். இலங்கை நடிகர்கள் ஐம்பதுபேரும் 'எக்ஸ்ரு' நடிகர்களாகவே நடிக்கவேண்டும் இதுவா கூட்டுத்தயாரிப்பு?

இலங்கையில் திறமையுள்ள கலைஞர்கள் இல்லையென்ற தீர்மானமா? நடிப்பு என்பது ஒரு நடிகனுக்குச் சரியான சந்தர்ப்பமும், பொருத்தமான பாத்திரமும் கொடுத்தால் திறமையான நடிப்பை எதிர்பார்க்கலாம். தென்னிந்தியத்தமிழ்த் திரைப்பட உலகம் மாபெரும் உலகசாதனையெதையும் இதுவரை சாதிக்கவில்லை. ஈழத்துச் சிங்களத் திரைப்படங்களின் சாதனையைக்கூட எட்டிப்பிடிக்கமுடியவில்லை. குறிப்பிட்ட நடிகர்களை வைத்து அவர்களுக்காகப் படமெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஈழத்திலே இந்திய நடிகர்களுக்குச் சவால் விடக்கூடிய குணசித்திர நடிகர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் திரையுலகம் பயன்படுத்தவில்லையென்பதற்காக கலைஞர்களே இல்லையென்று கூற முடியாது.

இலங்கை - இந்தியக் கூட்டுத்தயாரிப்பால் இலங்கைக் கலைஞர்களை அவமதித்து அவர்களின் தொழில்வாய்ப்பை இழக்கச்செய்வதிலும் பார்க்க இந்தியப்படங்களையே இறக்குமதி செய்யலாமே. கலைநண்பர் சிவாஜி, இராஜராஜசோழனில் ஈழத்துக் கலைஞர் சிறீசங்கருக்குக் கொடுத்த முக்கியத்துவமென்ன? இந்தியாவில் உள்ள வசதிகள் இலங்கையில்லாமலிருந்தும் 'கோமாளிகள்', 'காத்திருப்பேன் உனக்காக', 'நான் உங்கள் தோழன்' போன்ற தரமான படங்கள் வெளிவரவில்லையா? சிங்களத் திரைப்பட ரசிகர்கள் சிங்களத் திரைப்படங்களை தேசியப்பற்றுடன் பார்க்கிறார்கள். தமிழ்ப்படங்களை இலங்கை ரசிகர்கள் இந்திய நடிகர்களுடனும் இந்தியப் படங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இந்த மனப்பான்மை நீங்கினால் இலங்கைத் தமிழ்ப்படம் பெரிய சாதனையைச் சாதிக்கும். (இ)

## கூட்டணியின்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

குடியேறிக்கொண்டிருக்கும் மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பும் சீவியத்திற்கு வழிவகைகளைக் காட்டுவதும் ஒவ்வொரு தமிழனையும் சார்ந்ததென்றும் கூறினர்

அமைப்புச்செயலாளர் திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை, இயக்குநர் ச. யோகேஸ்வரன், தமிழசு சின்னத்துரை, திரு. செ. வசீகரநாதன் ஆகியோர் கிளை வேலைத் திட்டங்கள் பற்றி விளக்கிப் பேசினர்.

ஊருக்கொரு கிளை என்ற அடிப்படையில் கோப்பாய்த் தொகுதியில் கிளைகள் அமைத்தும் புனரமைக்கப்பட்டும் வருகின்றன. இதுவரையில் புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி, ஆவரங்கால், புத்தூர் மேற்கு ஆகிய கிராமக்கிளைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. மற்றும் மிகவும் விரைவில் புனரமைப்புக்குள்ளாகவேண்டிய கிராமங்கள் பின்வருமாறு:

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, வாதரவத்தை, நவக்கிரி, அச்செழு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கு, ஊரெழு, உரும்பராய், கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு, இருபாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, வசாவிளான், தம்பாலை, வளலாய் இடைக்காடு, பத்தைமேனி, திரிப்பாய். (அ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மப்ரியா
வைரநெஞ்சம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சிவாஜி - சாவித்திரி
குறவஞ்சி

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
துணிவே துணை

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - மைனாவதி
குலதெய்வம்
(புதிய பிரதி)
3-3-78 முதல்
ஊருக்கு உழைப்பவன்

## ''வாக்களித்துவிட்டால் மட்டும் தமிழ்ஈழம் கிடைத்துவிடாது''

[வட்டுக்கோட்டை]

''சென்ற முப்பதாண்டுகால அநீதிகளின் பிரதிபலிப்புத்தான் தமிழ்ஈழக் கோரிக்கை என சிலர் நினைக்கலாம். ஆனால் இவ் அநீதிகள் உந்துதல்களாக அமைந்தனவே தவிர தமிழர்கள் தமிழ்ஈழ மண்ணை ஆண்டவர்கள் என்ற வரலாற்றுச் சான்றுகளே இக்கோரிக்கையின் அடிப்படைக் காரணமாக அமைகின்றன'' என்று தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் மாவை சேனாதிராசா சித்தன்கேணியில் நடைபெற்ற வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை அமைப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். தமிழ் இளைஞர்பேரவையின் புதிய அமைப்பு விதிகளுக்கமைய இத்தொகுதி இளைஞர் பேரவைக் கிளையை புனரமைப்புச் செய்வதற்காக இக் கூட்டம் கூட்டப்பட்டது. திரு. ஆ.சேயோன் தலைமை வகித்தார்.

மாவைசேனாதிராசா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சென்ற ஆகஸ்ட் கலவரத்தின் பின்னர் தமிழ் ஈழத்தைப் பெற்றுத்தருவதாகக் கூறினீர்களே எங்கே அந்தத் தமிழ் ஈழம் என எம்மைப்பார்த்து அனேகர் கேட்கின்றனர். இவர்கள் வாக்களித்து விட்டால் மட்டும் தமிழ்ஈழம் கிடைக்கும் என எண்ணியிருப்பார்களேயானால் அது எமது தவறல்ல சென்ற பொதுத் தேர்தலைப் பொதுசன வாக்கெடுப்பாக நாம் கருதினோமேயொழிய வெறும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கின்ற தேர்தலாக கருதவில்லை. இளைஞர்கள் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் அதே வேளையில் அவர்கள் விடுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டவும் தயங்கக்கூடாது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் அனைவரும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களாக இயங்கும் அதே வேளையில் தமிழ்ஈழ தேசிய மன்றம் ஒன்று அமைத்து செயல்படுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றி நாம் தலைவர்களிடம் கேட்ட போது சித்திரைமாதம் நடைபெறவுள்ள கூட்டணி மகாநாட்டிற்குப் பின்னர் இது பற்றிய முடிவை அறிவிப்போம் எனக் கூறியுள்ளனர் என்றார். இக்கூட்டத்தில் ஐந்துபேர் கொண்ட நடவடிக்கைக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. [அ]

## இன்னிங்ஸால் வெற்றி

[அரியாலை]

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணக்கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் பரியோவான் கல்லூரிக்கோஷ்டி இன்னிங்சாலும் 72 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 8 விக்கட்டுகளை இழந்து 262 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. அதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரிக்கோஷ்டி முதலாம் ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களையும், அதனைத் தொடர்ந்து இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 81 ஓட்டங்களையும் பெற்றது.

பரியோவான் கல்லூரிக் கோஷ்டியின் சார்பில் விளையாடிய டி. எம். இரத்தினராசா 137 ஓட்டங்களையும், யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் விளையாடிய குணசீலன் வெளியேறாமலே 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பரியோவான் கல்லூரி கோஷ்டியில் பந்து வீசிய ஈ. யே. ஜெபரத்தினம் 42 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளையும், சிறீதரன் 25 ஓட்டங்களையும் கொடுத்து 3 விக்கட்டுகளையும், யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் விளையாடிய எஸ். ஜெயேந்திரன் 66 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

# "நகுலேஸ்வரியும், அன்னலட்சுமியும் இரத்தத்தில் கிடந்தனர்; எதிரி துவக்குடன் நின்றார்"

## வேலணை ஏழுபேர் கொலைவழக்கில் உதயராணி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'நான் வீட்டிற்குள்ளிருந்தபோது இரண்டு வெடிச்சத்தம் கேட்டது. 3வது வெடிச்சத்தம் கேட்டதும், வெளியில் வந்தேன். நகுலேஸ்வரியும், அன்னலட்சுமியும், இரத்தத்தோடு கிடந்தனர். எதிரி சுந்தரலிங்கம் துவக்குடன் நின்றார்."

வேலணை கொலை வழக்கில் இராசரத்தினம் உதயராணி சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

வேலணையில் ஏழுபேரைச் சுட்டுக்கொலைசெய்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம் எம் அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், வேலணையில் 76 ஜனவரி 21ம் தேதி காங்கேசு சுந்தரலிங்கம் என்ற இளைஞர், பொன்னையா செல்வரத்தினம் [வயது 30], கந்தையா நகுலேஸ்வரி [வயது 60], தியாகராசா அன்னலட்சுமி [வயது 26] தியாகராசா ஜெயகுமாரி [வயது 4], கந்தையா தியாகராசா [வயது30], பொன்னையா அன்னலட்சுமி, பொன்னையா லோகநாயகி ஆகியோரைக் கொலைசெய்ததாகவும், சின்னத்துரை இராசலட்சுமி, இராசரத்தினம் உதயராணி, பொன்னையா இராசரத்தினம் ஆகியோரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம், சட்டத்தரணி வி என். நவரத்தினம், சட்டத்தரணி ரி சோமசுந்தரம், சட்டத்தரணி கே பி எஸ் வரதராசா, சட்டத்தரணி எஸ் சுரேந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானார்.

### வெடிச்சத்தம்

இராசரத்தினம் உதயராணி சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: எதிரியை எனக்குத் தெரியும். காலையில் நகுலேஸ்வரி வீட்டிலிருந்தேன் வெடிச்சத்தம் கேட்டபின் வெளியில் வந்தேன். தலைவாசலுக்கு இராசரத்தினம் போனார். இராசலட்சுமியும் நானும் பின்னால் போனோம். எதிரி எங்களையும்நோக்கிச்சுட்டார் இராசரத்தினம் வெளியில் போக, நாங்கள் தடுக்க சூடு விழுந்தது. 3 பேருக்கும் சூடுபட்டது. இராசரத்தினம் விழுந்துவிட்டார். நான் குளறியபோது தியாகராசா அன்னலட்சுமி வந்தார். அதன்பின்பும் ஒருவெடிகேட்டது. என்ன நடந்ததெனத் தெரியாது. அரை மணி நேரத்தின் பின் யோகரத்தினம் வந்தார். பின் கதிரேசுவும் வந்தார். பொன்னையா அன்னலட்சுமி இருந்த இடத்திற்கும் வேலிக்கும் 15 யார் தூரமிருக்கும்.

எதிரி சார்பில் ஆஜரானசட்டத்தரணி எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தார்.

### எதிரியை தெரியும்

சட்: எதிரியை முன்பு தெரியும்?- ஆம்.

சட்: எப்ப விவாகம் செய்தீர்?-சம்பவம் நடப்பதற்கு 6 மாதத்தின் முன்பு.

சட்: எப்போ எதிரியைத் தெரியும்?- ஆம்.

சட்: எதிரி கிளிநொச்சியில் கமம் செய்வது தெரியுமா?- தெரியாது.

சட்: அநேக நாட்கள் கிளிநொச்சியில் தங்குவார்?- மனைவி வீட்டில் இருப்பதுதெரியும்.

சட்: மிளகாய்க்கன்று களவெடுத்ததாக, உமது புருஷனையும், தியாகராசாவையும் எதிரியின் மனைவி புகார்செய்தார்? ஆம்.

சட்: தியாகராசா அடித்ததாக அவர் புகார் செய்தார்?- அப்போது தெரியாது. இப்போ தெரியும்.

சட்: ஆஸ்பத்திரியில் எதிரியின் மனைவி இருந்தார்?- ஆம்

சட்: உடம்பெல்லாம் அவருக்கு காயம்?- கையில் தான் காயமெனக் கேள்விப்பட்டேன்.

சட்: எதிரியின் வீடுஎரிந்தது தெரியுமா?-தெரியாது. தியாகராசா வீடுதான் எரிந்து அவர் எங்கள் வீட்டிலிருந்தார்.

சட்: எதிரியின் மனைவி குடியிருக்க வழியில்லாமல் அலைந்தார்? -தெரியாது.

சட்: எதிரியின்வீட்டுப்பக்கம் போகவில்லையா?-இல்லை

சட்: உமது கணவன் பொலிஸுக்குப்போக புறப்பட்டார்? ஆம்.

சட்: உமது கலியாண வீட்டிற்கு, வீடு வேய்ந்து புதிதாக வேலி அடைத்தார்கள்?-இல்லை சம்பவத்தின் பின்புதான் வேலி அடைத்தோம். கலியாணவீட்டிற்கு வேலி அடைக்கவில்லை.

### வெள்ளைச்சேட் போட்டிருந்தார்

இராசலட்சுமி 'ஐயோ, ஐயோ' என்று சத்தம் போட்டதாகவும், கணவன் சொன்ன பின்னர்தான் யார் சுட்டதென்று தெரியுமென்றும் வேலிக்கதியாலோடு எதிரி நின்றாரென்றும், வெள்ளைசேட் போட்டிருந்தாரென்றும், உதயராணி கூறினார்.

எதிரிக்கு முன்பு கோபதாபமிருந்ததென்றும், அதனால் தான், கணவன், சுட்டுப்போட்டாயா? என்று கேட்டாரென்றும், வேலிபிரிந்திருந்ததால் தான், எதிரியைக்காணக்கூடியதாக இருந்ததென்றும். பிரித்திருக்காவிட்டால் தெரிந்திருக்காதென்றும், அரச சட்டத்தரணி ஆர் ஐ கனகரத்தினத்தின் கேள்விக்கு பதிலளிக்கையில், உதயராணி கூறினார்.

### முற்றத்தில் கிடந்தார்

பொன்னையா இராசரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரியை எனக்குத் தெரியும். சம்பவம் நடந்தபோது வீட்டிலிருந்தேன். வெடிச்சத்தம் கேட்டது. 3ம் வெடிச்சத்தத்திற்கு வெளியில் வந்தோம். அம்மாமுற்றத்தில் விழுந்துகிடந்தார். அன்னலட்சுமியும் கிடந்தார். வேலியைப் பார்த்தேன். எதிரி சுந்தரலிங்கம் நின்றார். எங்களுக்கும்சுட நான் விழுந்துவிட்டேன்.

சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: உமக்கும் தியாகராசாவுக்கும் எதிராக எதிரியின் மனைவி பொலிஸில்புகார் செய்திருந்தார்?- ஆம்.

சட்: அவரின் மிளகாய்கன்றை பிடுங்கியதாக முறைப்பாடு செய்திருந்தார்?-ஆம்

சட்: பொலிஸ்காரர் விசாரணைக்கு உங்களை வரச்சொன்னார்கள்?-ஆம்

சட்: தியாகராசா அடித்து துன்புறுத்தியதாக எதிரியின் மனைவி மற்றொரு புகார் செய்திருந்தார்? ஆம்.

சட்: திரிக்கவாலால் அடித்ததா?-தடியால்.

### எதிரி வீட்டிலில்லை

சட்: அப்போது எதிரி வீட்டில் இல்லை?-இல்லை.

சட்: கிளிநொச்சிக்கு எதிரி கமம்செய்ய போயிருந்தார்?- இல்லை. சும்மா வேட்டையாடப்போவார்.

சட்: எதிரியின் மனைவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்?-ஆம்.

சட்: எதிரி இல்லாத நேரத்தில் இது நடந்தது? ஆம்.

சட்: எதிரியின் வீடு எரிந்துபோனது?-ஆம்.

சட்: உமது வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதா?-ஆம் என்ன விபரம் என்று எனக்குத் தெரியாது.

சட்: எ முறை பதியப்பட்டதா?- ஞாபகமில்லை.

### எதிரி நின்றார்

சின்னத்துரை இராசலட்சுமி சாட்சியமளித்தபோது, அம்மா தலைவாசலில் இருந்ததாகவும், அன்னலட்சுமி பின்னுக்கு இருந்ததாகவும் தான்போய் பிள்ளையோடு இருந்ததாகவும் கூறினார்.

### குறுக்கு விசாரணை

எதிரியின் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்கையில் இராசலட்சுமி கூறியதாவது: இராசரத்தினமும் மனைவியும், உள் வீட்டில் இருந்தனர் வெளியில் சத்தம்கேட்டது. முதல்வெடிச்சத்தம் கேட்டது. அன்னலட்சுமி விழுந்தார். நான் பிள்ளையுடன் ஓடிப்போய் முற்றத்தில் பார்த்தேன். எதிரி சுந்தரலிங்கம் நின்றார்.

சட்: எதிரி சுடும்போது அருகில் தெய்வேந்திரம். கார்த்திகேசு நின்றார்களா?-இல்லை

சட்: முழுச் சம்பவத்தின்போதும் அவர்கள் இல்லை?- இல்லை. இராசரத்தினம், சுந்தரலிங்கத்தைப்பார்த்து அம்மாச்சியையும், அம்மாவையும் சுட்டுப்போட்டாய் உள்ளுக்கு வாடா என்றார்.

சட்: சம்பவத்தின்போது நான் பதட்டமடைந்து இருந்த இடத்தில் இருந்துவிட்டேன் என பொலிஸுக்கு கூறினீரா?- இல்லை.

சட்: இராசரத்தினத்தை வெளியில் போகாமல் தடுக்க, மருமகன் சுந்தரலிங்கம் துவக்குடன் நிற்பதைக் கண்டேன் என்று பொலிசிற்குச் சொன்னீரா?- இல்லை.

சட்: எப்படிச் சுட்டவர்?- வேலி ஓலை உக்கிப்போய்விட்டது. அதிலுள்ள கிளுவையொன்றில் கவட்டை இருந்தது. அதில் துவக்கை வைத்துச் சுட்டார்.

சட்: மரண விசாரணையில் நீதவானுக்கு வேலி ஊடாகத் துப்பாக்கியை வைத்து சுட்டதாகச் சொன்னீரா?- இல்லை.

சட்: நீதவானுக்கு, சுந்தரலிங்கம் இருக்கன்றான் என்று தலைவாசலில் குனிந்துபார்த்ததாகச் சொன்னீரா?-இல்லை.

சட்: உங்கள் வீட்டிற்கருகில் பல வீடுகள் உண்டு?- இரண்டு வீடுகள்.

சட்: வெடிச் சத்தம் கேட்டது?-ஆம்.

சட்: அப்போது பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரும் வரவில்லை?- இல்லை.

### எதிரியின் மனைவியைத் தெரியும்

எதிரியின் மனைவியைத் தெரியுமென்றும், அவர் தங்கள் கிராமத்தல் இருப்பதாகவும், எதிரியின் மனைவிக்கு அடித்ததாக வழக்கு எதுவும் இல்லையென்றும் இராசலட்சுமி கூறினார். பொலிசாருக்குப் புகார் செய்ததுபற்றியும் தெரியாது எனக் கூறினார்.

சட்: எதிரியின் மனைவிக்கு திருக்கைவாலால் அடித்து மார்பிலும் உடலிலும் காயமேற்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தது தெரியுமா?- தெரியாது.

சட்: எதிரியின் மனைவிக்கு அடித்ததாக ஊர்காவற்றுறை கோர்ட்டில் வழக்கொன்று இருந்தது தெரியுமா?- தெரியாது.

சட்: வாக்குமூலம் கொடுக்கவில்லையா?- இல்லை.

சட்: எதிரியின் மனைவி, எதிரிக்குத் தந்தி அடித்தார் என்று பொலிசாருக்குச் சொன்னீரா?- இல்லை.

சட்: இராசரத்தினம் தியாகராசாவிற்கு எதிராக மிளகாய்க்கன்று திருடியதாக, எதிரியின் மனைவி பொலிசில் புகார் செய்தார்?- இல்லை.

சட்: அதன்பின் இராசரத்தினம், தியாகராசா எதிரியின் மனைவிக்கு அடித்து ஆஸ்பத்திரியிலிருந்ததாக, பொலிசாருக்குச் சொன்னீரா?- நான் சொல்லவில்லை.

நீதவான்: தியாகராசா வீடு எப்ப எரிந்தது?- 10 நாளுக்கு முன்பு.

சட்: வீட்டு வேலிக்கு அப்பால் நிற்பவரை தெரியாது?- அப்புக்காத்து வந்து பார்த்தவர்.

நீதவான்: எப்ப பார்த்தவர்?- ஒரு வருடத்தின் பின்.

சட்: வந்த அப்புக்காத்து உயரமானவர்?- ஆம்,

சட்: அந்த வேலி பனை ஓலையால் அடைத்திருந்தது?- ஆம். அது அப்பொழுதுதான் அடைக்கும்முறை, யோகம்தப்பிப் போச்சு.

சட்: கதிரேசு எப்ப வந்தார்?- அன்னலட்சுமி வந்து அரை மணித்தியாலத்தின் பின்.

சட்: யாருடன் வந்தார்?- தனிய வந்தார். பின் யோகரத்தினம் வந்தார்.

சட்: புகையிலைப் போறணைக்கு எவ்வளவு தூரத்தில் சுட்டார்?- வேலிக்கு வெளியில் நின்று, எதிரி வெள்ளை சேட் அணிந்திருந்தார். வேலி புதிதாயிருந்தால், சேட்டைக் காணமுடியாது.

சட்: என்ன உடுப்பு போட்டிருந்தார் எனச் சொல்ல முடியாதென பொலிசுக்கு கூறினீரா?- வெள்ளை சேட்டு தெரியும் வேட்டி தெரியாது என்று கூறினேன்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ் சுப்பிரமணியம் சாட்சியமளித்தார்

விசாரணை இன்று காலை 9-15 மணிக்கு தொடர்ந்து நடைபெறும். (஥)

## திரைப்படம் மூலம் நிதிசேகரிப்பு

### யாழ். லயன்ஸ் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகம் தனது சமூக சேவை நிதிக்காக சினிமாக் காட்சிமூலமும் நிதி சேகரிக்கிறது.

அடுத்த மாதம் 3 ம் திகதி வெள்ளியன்று யாழ். மனோகராவில் திரையிடப்படவிருக்கும் புதிய படமான மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடிக்கும் 'ஊருக்கு உழைப்பவன்' அன்றைய காட்சிகள்மூலம் கிடைக்கும் பணம் லயன்ஸ் கழக சமூகசேவை நிதிக்குச் சேரும். யாழ். லயன்ஸ் கழகம் இதுவரை பல ஆக்கபூர்வமான உதவிகளைச் சமூகத்திற்குச் செய்துள்ளது,

யாழ்ப்பாணத்தில் ஒரு புற்று நோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக இதுவரை 75,000 ரூபாய் உதவி வழங்கியுள்ளதுடன் மேற்படி சிகிச்சைக்குத் தேவையான 'கோபால்ற் யூனிற்' வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதற்கு நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளது.

ஆகஸ்ட் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கும் யாழ். லயன்ஸ் பல திட்டங்களை வகுத்துள்ளது. (அ)

## குறள்வழி நடப்பதே நாம் வள்ளுவருக்கு செய்யும் கைமாறு

[யாழ்ப்பாணம்]

"திருவள்ளுவருக்கு விழா எடுப்பதனாலோ, திருவள்ளுவர் பற்றிப் பேசுவதனாலோ பயனில்லை. அன்னார் காட்டிய வழிநடத்தலே, உலகத் திருமறையை நமக்களித்த திருவள்ளுவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்."

இவ்வாறு சிறுப்பிட்டி சி. வை தாமோதரம் பிள்ளை ஞாபகார்த்த அறிவாலயத்தில் அவ்வூர் மாதர் சங்கம் நடத்திய திருவள்ளுவர் விழாவில் பேசுகையில் திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை கூறினார்.

ஆசிரியர் திரு கு. விநாசித்தம்பி விழாவுக்குத் தலைமை வகித்தார். இப்படிப்பட்ட விழாக்களை இம்மாதர் சங்கம் தொடர்ந்து நடத்தவேண்டுமென்றும், இச்சேவையில் ஈடுபடும் மாதர்களுக்கு ஊர்மக்கள் ஊக்கமளிக்கவேண்டுமென்றும் தலைவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

திரு. தா. பத்மநாதன், செல்விகள் ஸ்ரீசுயந்தி வேலுப்பிள்ளை, வசந்தமாலா மாப்பாணர், கலாவாணி செல்லத்துரை, புவனேஸ்வரி சின்னத்துரை ஆகியோரும் பேசினர். [அ]


## மீனவர்களுக்கு. ஓர் அறிவித்தல்

குறுலோன் கயிறு மில்லிமீட்டர் (கம்பாயம்) கப்பலில் ஜப்பானிலிருந்து வருகின்றது. ஏமாற்றத்தைத் தவிர்க்க மீனவர்களையும், சங்கங்களையும் முற்காசுகட்டி ஓடர் செய்யுமாறு வேண்டுகிறோம்.

கூடைவலைகள்

கூடைவலைகளும் இனிமேல் தனித்தனியே மீனவர்களுக்கு விற்கப்படும் உங்கள் அட்டைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வர்த்தக முகாமையாளர்

சி-நோர்

குருநகர்.

8632


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் இவ்வோனில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389 Registered as a Newspaper in Srilanka